**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No,53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**STC.No. 814/2023**

PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | நாராயணன்(PW2) | | |
| Father's Name | சண்முகம் | தொழில் | |
| Village | திருப்பூர் | | |
| Taluk | திருப்பூர் | Age | **36** |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of August 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு பேப்ரிக் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.08.2017 காலை 08.30-09.00 மணி அளவில் புதிய பேருந்து நிறுத்தம் அருகே உள்ள வளைவில் நின்று நாங்கள் ஆறு நபர்கள் பேசிக்கொண்டிருந்தோம். அதற்கு முந்தைய நாள் அந்த இடத்தில் விபத்து நடந்ததற்காக அந்த இடத்தில் போலீசார் வந்து மேப் போட்டு எழுதினார்கள். அதற்கு சாட்சியாக இருக்கும் படி கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் காண்ட்ராக்ட் எடுத்து வேலை செய்து வருகிறது போலீசாரிடம் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் சுந்தரியை என் வீட்டிற்கு அருகில் முன்பு வசித்து வந்தபோது எனக்கு அவரை தெரியும். வழக்கு விபத்து சம்பந்தமாக எனக்கு நேரடியாக எந்த விபரமும் தெரியாது என்றால் சரிதான். சொன்ன முறையில் சொன்ன விதத்தில் நான் அவிநாசி வரவும் இல்லை போலீசார் என்னை விசாரிக்கவும் இல்லை என்றும் சுந்தரி எனக்கு தெரிந்தவர் என்பதால் அவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணங்களை நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம்

செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |